# January 9, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உக்ரைன் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை வாங்கும் நாடுகள் மீது 500 சதவீத வரி விதிக்க வகை செய்யும் சட்ட மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (ஜன.7) அறிமுகம் செய்யப்பட்டது.

(i) இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டமானால் இந்தியா, சீனாவுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.

(ii) இந்த அமெரிக்க மேலவை உறுப்பினர்கள் (செனட்) லிண்ட்சே கிரஹாம் மற்றும் ப்ளூமென்தல் சார்பில் 'ரஷியா பொருளாதார தடைச் சட்டம் 2025 என்ற பெயரில் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மசோதா மீது நாடாளுமன்றத்தில் அடுத்த வார தொடக்கத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவிருப்பது தெரியவந்துள்ளது. இந்த மசோதாவுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட்டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

(iii) ரஷியாவிடமிருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்குவது மற்றும் இந்திய-அமெரிக்க இருதரப்பு வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை இழுபறியைக் காரணம் காட்டி இந்தியாவிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அதிபர் டிரம்ப் ஏற்கெனவே 50 சதவீத வரியை விதித்தார். இதன் காரணமாக, இந்தியாவில் ஜவுளித் துறை உள்பட பல்வேறு துறைகள் கடுமையான பாதிப்பைச் சந்தித்துள்ளன. இதுபோல, சீனா உள்பட ரஷியாவிட மிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் பிறநாடுகள் மீதும் அமெரிக்கா கூடுதல் வரியை விதித்தது.

(iv) இந்தச் சூழலில், ரஷியா விடமிருந்து தொடர்ந்து எண்ணெய் வாங்கி வரும் நாடுகள் மீது 500 சதவீத வரியை விதிக்க வகை செய்யும் மசோதாவை இரு அமெரிக்க எம்.பி.க்கள் தற்போது அறிமுகம் செய்துள்ளனர்.

(v) இது குறித்து அமெரிக்க மேலவை உறுப்பினர் லிண்ட்சே கிரஹாம் தனது எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது: ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யைக் கொள்முதல் செய்து, அதை சுத்திகரிப்பு செய்து மறுவிற்பனை செய்யும் நாடுகள் மீது 500 சதவீத வரியை அமெரிக்கா விதிக்கும் வகையில் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

(vi) ரஷியாவிடமிருந்து மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்கி, உக்ரைன் மீதான போருக்கு உதவிவரும் சீனா, இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளை கடுமையாகத் தண்டிக்க இந்த மசோதா உதவும்.

(vii) இந்த மசோதாவை, மேலவையின் வெளியுறவுக் குழுவில் இடம் பெற்றுள்ள ஏறக்குறைய அனைத்து எம்.பி.க்களும் ஆதரித்துள்ளனர். இந்த மசோதா அடுத்த வார தொடக்கத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றார்.

(viii) இந்தியா-பிரான்ஸ் தலைமையிலான சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு, ஐ.நா. அமைப்புகள் உள்பட 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து அமெரிக்கா விலகியுள்ளது. இது தொடர்பான விலகல் தீர்மானத்தில் அதிபர் டிரம்ப் கையொப்பமிட்டார். இதில், ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபையின் 31 அமைப்புகளும், பிற 35 சர்வதேச அமைப்புகளும் அடங்கும்.

(ix) வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'இந்த 66 அமைப்புகளும் அமெரிக்க தேசிய நலன்களுக்கும், பாதுகாப்புக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், இறையாண்மைக்கும் எதிராகச்செயல்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகளில் இருந்து அமெரிக்கா விலகுவது என்பது உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவது அல்லது சட்டப்படி அனுமதிக்கப்பட்ட இந்த அமைப்புகளுக்கான நிதி உதவியையும் அமெரிக்கா நிறுத்துவது என்பதை அதிபர் தெளிவுபடுத்தியுள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டது.

2. பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில் கொண்டு, தில்லி உள்பட இந்தியாவில் உள்ள தனது முக்கியத் தூதரகங்களில் நுழைவு இசைவு (விசா) சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக வங்கதேச இடைக்கால அரசு அறிவித்தது.

(i) கொல்கத்தாவில் உள்ள வங்கதேச துணைத் தூதரகம் ஏற்கெனவே விசா சேவைகளைக் கட்டுப்படுத்தியுள்ளது. எனினும், வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான விசாக்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தாது. மும்பை, சென்னையில் உள்ள தூதரகங்களில் விசா சேவைகள் வழக்கம் போல் செயல்படும்.

(ii) வங்கதேசத்தில் கடந்த 2024-ஆம் ஆண்டு, ஷேக் ஹசீனா ஆட்சிமாற்றத்துக்குப் பிறகு, பாதுகாப்புக் காரணங்களைக் கூறி வங்கதேச குடிமக்களுக்கு விசா கட்டுப்பாடுகளை இந்தியா விதித்தது குறிப்பிடத்தக்கது.

(iii) இதனால் இருநாட்டு உறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், வங்கதேசம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

3. வெனிசுலா எண்ணெய் ஏற்றுமதியை காலவரையின்றி கட்டுப்படுத்தி, அதில் கிடைக்கும் வருவாயை தங்கள் நாட்டுக் கணக்குகளில் வரவு வைக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

(i) இதுகுறித்து, மியாமியில் நடந்த கோல்ட்மேன் சாக்ஸ் மாநாட்டில் அந்த நாட்டு எரிசக்தித் துறை அமைச்சர் கிறிஸ் ரைட் பேசியதாவது: வெனிசுலா எண்ணெய் ஏற்றுமதியை முழுமையாகக் கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளோம். முதலில் வெனிசுலாவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள எண்ணெய்யை விற்பனை செய்வோம். அதன்பிறகு வெனிசுலாவில் உற்பத்தியாகும் எண்ணெய்யை அமெரிக்கா பிற நாடுகளுக்கு தொடர்ந்து ஏற்றுமதி செய்யும். இதனால் கிடைக்கும் வருவாய் வெனிசுலா பெயரில் அமெரிக்கக் கணக்குகளில் வரவு வைக்கப்படும். இது வெனிசுலா மக்களின் நலனுக்கு பயன்படுத்தப்படும் என்றார் அவர்.

(ii) இதற்கிடையே, வெனிசுலா எண்ணெய் விற்பனையை அமெரிக்கா ஏற்கனவே தொடங்கிவிட்டதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லெவிட் தெரிவித்தார்.

(iii) முன்னதாக, வெனிசுலா அமெரிக்கா அக்கு 3 முதல் 5 கோடி பீப்பாய் எண்ணெய்யை வழங்கும் என்று அதிபர் டிரம்ப் அறிவித்தார். அதன் மதிப்பு சுமார் 280 கோடி டாலர் (சுமார் ரூ.25,172 கோடி) ஆகும். இதில் கிடைக்கும் வருவாய் தனது கட்டுப்பாட்டில் இருக்கும் என்று டிரம்ப் கூறினார்.

(iv) இருந்தாலும், வெனிசுலா இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிகஸ் இதற்கு ஒப்புக்கொண்டாரா என்பது குறித்து தெளிவான தகவல்கள் வெளியாகவில்லை. இது தொடர்பாக எந்த அறிக்கையையும் அவர் வெளியிடவில்லை.

(v) இந்த நிலையிலும், வெனிசுலா எண்ணெய் துறையை அமெரிக்க நிறுவனங்கள் மறுகட்டமைப்பு செய்யும் என்று டிரம்ப் அரசு தெரிவித்துள்ளது. செவ்ரான், கானோகோபிலிப்ஸ், எக்ஸான் போன்ற நிறுவனங்களுடன் இதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(vi) இது குறித்து ஆலோசிப்பதற்காக எரிசக்தி நிறுவனத் தலைவர்களை டிரம்ப் சந்திப்பார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது.

(vii) உலகில் மிக அதிக அளவு எண்ணெய் இருப்பைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றான வெனிசுலாவில் ஊழல், முதலீடு பற்றாக்குறை காரணமாக தினசரி எண்ணெய் உற்பத்தி 10 லட்சம் பீப்பாயை தாண்டவில்லை. எனவே, அந்தத் துறையை சீர் செய்வதன் மூலம் குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் உற்பத்தியை சில லட்சம் பீப்பாய் அதிகரிக்க முடியும் என்று அமெரிக்க எரிசக்தித் துறை அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது. இருந்தாலும் முழு மறுகட்டமைப்புக்கு அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஆண்டு தோறும் 1,000 கோடி டாலர் தேவைப்படும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

4. ஆதார் சேவைகள் குறித்து பொதுமக்கள் எளிமையாக தெரிந்துகொள்ள 'உதய்' என்ற அடையாளச் சின்னம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) தெரிவித்தது.

(i) திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ‘உதய்' சின்னத்தை யுஐடிஏஐ தலைவர் நீல்காந்த் மிஸ்ரா அறிமுகப்படுத்தினார். அதைத்தொடர்ந்து, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

5. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பாதுகாப்புக்கு பாடுபட்ட பிரபல சூழலியலாளர் மாதவ் காட்கில் (83) உடல்நலக் குறைவால் காலமானார்.

(i) இந்தியாவின் சூழலியல் ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்புக் கொள்கையை வடிவமைப்பதில் மாதவ் காட்கில் முக்கியப் பங்காற்றினார். அவர் சூழலியல் அறிவியல் மற்றும் இந்திய அறிவியல் கல்வி மையத்தை பெங்களூரில் நிறுவினார். காட்கில் ஆணையம் என்று அழைக்கப்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலை சூழலியல் நிபுணர் குழுவின் தலைவராக அவர் பதவி வகித்தார்.

(ii) கடந்த 2024-இல் அவருக்கு வருடாந்திர 'சாம்பியன்ஸ் ஆஃப் எர்த் விருதை ஐ.நா. சபை வழங்கியது. ஐ.நா.வின் உயரிய சுற்றுச்சூழல் விருது இதுவாகும்.

(iii) மத்திய அரசு அமைத்த மேற்குத்தொடர்ச்சி மலை நிபுணர் குழுவின் தலைவராக மாதவ் காட்கில் செயல்பட்டார். மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மக்கள் தொகை அழுத்தம், பருவநிலை மாற்றம், வளர்ச்சிப் பணிகள் ஆகியவை குறித்து இக்குழு ஆய்வு நடத்தியது.

6. தமிழகத்தில் ரூ.9,820 கோடி தொழில் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சென்னையில் தொடங்கிய தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமாகின. இதன் மூலம் 4,250 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று முதல்வர் நம்பிக்கை தெரிவித்தார்.

(i) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் 2026-ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை சென்னை வர்த்தக மையத்தில்

முதல்வர் மு.க.ஸ்டா லின் தொடங்கிவைத்தார்.

7. வளரிளம்பெண் குழந்தைகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை நான்கு மாவட்டங்களில் இந்த மாத இறுதிக்குள் தொடங்கபொது சுகாதாரத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

(i) அதன்படி, திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், தருமபுரி மாவட்டங்களில் அந்த தடுப்பு மருந்துகள் பாதுகாப்பாகக் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளன. அங்கு 9 வயது முதல் 14 வயது வரை உள்ள பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கும் திட்டத்தை விரைவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கவுள்ளார்.

(ii) ‘ஹியூமன் பாப்பிலோமா வைரஸ்' (ஹெச்பிவி) எனப்படும் கிருமித் தொற்று காரணமாக கருப்பைவாய் புற்றுநோய் ஏற்படுகிறது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கருப்பை வாயின் உயிரணுக்களில் புற்று செல்கள் பரவி, அதன் திசுக்களை பாதிக்கும். உரிய நேரத்தில் கண்டறிந்து சிகிச்சை பெறாவிட்டால், நுரையீரல், கல்லீரல், சிறுநீர்ப்பை, மலக்குடல் உள்ளிட்ட பிற உறுப்புகளுக்கு பரவ வாய்ப்புள்ளது.

(iii) அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மைய தரவுகளின்படி தமிழகத்திலேயே தருமபுரி மற்றும் பெரம்பலூரில்தான் கருப்பை வாய் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுகிறது. அதாவது லட்சத்தில் 36 பெண்களுக்கு அத்தகைய பாதிப்பு அந்த மாவட்டங்களில் ஏற்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக அந்த விகிதம் அரியலூரில் 29.9-ஆக உள்ளது. சென்னையைப் பொருத்த வரை 13-ஆகவும், தமிழகத்தின் மொத்த கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்பு விகிதம் லட்சத்துக்கு 14-ஆகவும் உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

(iv) இதையடுத்து, 9 வயது முதல் 14 வயதுடைய சிறுமிகளுக்கு ஹெச்பிவி எனப்படும் தடுப்பூசி செலுத்த ரூ.38 கோடியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்தது. அதன் கீழ் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி இலவசமாக வளரிளம் பெண் குழந்தைகளுக்கு செலுத்தப்படவுள்ளது.